# சேருவிலப் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 03 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 24 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய சேருவிலப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய சேருவிலப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைாபடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் தொடர்பில் பதிலீடு செய்வதற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 693,576 ஆகும்.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாவுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 111,983 ஆகும்.

**1.3.4 இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| (i) பகுதி II இன் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையினால் அசையக் கூடிய மற்றும் அசையாத சொத்துக்கள் என்பவற்றிற்காக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) I ஆம் அத்தியாயத்தின் 5(xi) | காசு,களஞ்சியம் போன்றன தொடர்பில் காப்புறுதி |

| | |
|---|---|
| ஆம் பிரிவு | மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) I ஆம் அத்தியாயத்தின் 5 (xii) ஆம் பிரிவு | காசு மற்றும் களஞ்சியங்கள் போன்ற பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து போதிய பிணைவைப்புப் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv)XII ஆம் அத்தியாயத்தின் 204 ஆம் பிரிவு | ஆண்டின் இறுதியில் முத்திரைகள் மற்றும் காகிதாதிகள் என்பன கணிப்பீட்டுச் சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) XII ஆம் அத்தியாயத்தின் 217 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 756 | 2010 ஆம் ஆண்டின் இறுதியில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | வாகன ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு மற்றும் 2006 ஒக்தோபர் 12 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதம் என்பவற்றிற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் நிர்மாண வேலைகள் என்பவற்றிற்கான கொடுப்பனவில் இருந்து ரூபா 8,044 தொகையான பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 349,436 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 234,092 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 2 | 398 | 1 | 5 | 1 | 3 |
| (ii) | வாடகைகள் | 1,505 | 1,634 | --- | 728 | 892 | --- |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 205 | 137 | 67 | 155 | 159 | --- |
| (iv) | வேறு வருமானங்கள் | 1,399 | 5,302 | --- | 10,508 | 6,908 | 3,600 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் மாவட்ட நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 1,188,968 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை.

சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 6,318,320 | 4,759,789 | 1,558,531 | 5,916,000 | 4,094,470 | 1,821,530 |
| ஏனையவை | 2,642,320 | 1,964,988 | 677,332 | 5,980,000 | 3,632,500 | 2,347,500 |
| உப மொத்தம் | **8,960,640** | **6,724,777** | **2,235,863** | **11,896,000** | **7,726,970** | **4,169,030** |
| மூலதனச் செலவினம் | - | - | - | - | - | - |
| முழு மொத்தம் | **8,960,640** | **6,724,777** | **2,235,863** | **11,896,000** | **7,726,970** | **4,169,030** |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 07 | 05 | 02 |
| ஆரம்ப தரங்கள் | 13 | 10 | 03 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | - | 02 | (02) |
| மொத்தம் | 21 | 17 | 04 |

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.5.1 பயன்படுத்தப்படாதிருந்த மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்**

சில வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 620,000 பெறுமதியான பன்னிரெண்டு பொதுக் கிணறுகள் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் உபயோகமற்றுக் காணப்பட்டன.

**2.5.2 பெறவேண்டிய கணக்குகள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 25,000 ஆகும்.

**2.5.3 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,949,805 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,934,805 ஆகும்.

**2.6 மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாத சொத்துக்கள்**

பௌதீக மெய்மையாய்வு / மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதி செய்யப்படாத 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 25,245,785 ஆகும்.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) களஞ்சியம்
(உ) பதயியணியினர் கடன்கள்
(ஊ) வருமான நிருவாகம்
(எ) நட்டங்களுக்கான பதிவேடு.